வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 08 07.04.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 91 பக்கங்கள் : 08




# எரிபொருள், உரம் பெறுவதற்கு ரஷ்யாவுடன் உயர்மட்டப் பேச்சு!

## மொஸ்கோ செல்கிறார் விஜித ஹேரத்



கொழும்பு, ஏப். 07

**இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அடுத்த மாதம் ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

இலங்கைக்குத் தேவையான எரிபொருள், நிலக்கரி மற்றும் உரம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வது குறித்து மொஸ்கோவில் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளை அவர் முன்னெடுக்கவுள்ளார்.

கடந்த வாரம் ரஷ்யாவின் பிரதி வெளியுறவு மற்றும் எரிசக்தி அமைச்சர்கள் கொழும்புக்கு வருகை தந்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய நிலையில் இந்த விஜயம் அமையவுள்ளது.

ரஷ்யாவிலிருந்து எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த

07

## இந்திய துணை ஜனாதிபதி இலங்கைக்கு வருகின்றார்



கொழும்பு, ஏப். 07

இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

தனது விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரைச் சந்தித்து இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்திற்கான ஆரம்பகட்ட முன்னேற்பாடு கள் குறித்த கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி மற்றும் இந்தியத் துணை உயர்ஸ்தானிகர் சத்யஞ்சல் பாண்டே ஆகியோருக்கு இடையில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

07

## புதன் விசேட விடுமுறை இரத்து!

கொழும்பு, ஏப். 07

அரசாங்க ஊழியர்கள், நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்க ழகங்களுக்கு பிரதி புதன்கிழமைகளில் வழங்கப்பட்டிருந்த விசேட விடுமுறையை இந்த வாரம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய தீர்மானம் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை முதல் அமுல் படுத்தப்படும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி குறிப்பிட்டார்.

நாட்டில்நிலவும்நெருக்கடி சூழ்நிலையின்போது எரிபொருள் கையிருப்பை பேணுவதற்காக, பிரதி புதன்கிழமையை அரச ஊழியர்களுக்கு விடுமுறையாக அறி வித்து பொது நிர் வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கடந்த மார்ச் 17ஆம் திகதி சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

(அ)

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளை முடக்க முஸ்லிம் எம்.பிக்கள் அழுத்தம்

### உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 07

ஈஸ்டர் தாக்குதல் குறித்து தான் எழுதிய புத்தகத்தின் முடிவுகள் தவறானவை என்றோ அல்லது அதில் முன்வைக்கப்பட்ட வாதங்கள் பொய்யானவை என்றோ இதுவரை எவராலும் நிரூபிக்க முடியவில்லை என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய தீவிரவாதம் குறித்த விசாரணைகளைத் தடுக்க முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட முஸ்லிம் எம்.பிக்கள் அழுத்தம் கொடுத்திருந்தனர் எனவும் அவர் கூறினார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் உள்ள

07

## வெப்பநிலை அதிஉச்சம்!

கொழும்பு, ஏப். 07

இலங்கையின் சில பகுதிகளில் சூரியன் நேரடியாக உச்சம் கொடுப்பதன் காரணமாக எதிர்வரும் சில நாள்களுக்கு கடுமையான வெப்பமான காலநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது நிலவும் காலநிலை மாற்றத்தின்படி பேருவளை, புருளுபத்த, ரக்குவானை, கொடகவெல, உடவளவ மற்றும் தனமல்வில ஆகிய பகுதிகளில் சூரியனின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை சூரியன் இலங்கைக்கு நேர் உச்சியில் காணப்படுவதால் இந்த வெப்பம் நிலவுகிறது. காலை வேளையில்

07

## தரமற்ற மருந்துகள் இறக்குமதியால் சுகாதாரக் கட்டமைப்பு சீர்குலையும்!

### வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ கண்டனம்

கொழும்பு, ஏப். 07

நாட்டின் பல வைத்தியசாலைகளில் பதிவான நோயாளிகளின் மரணங்களுக்குக் காரணமென சந்தேகிக்கப்படும் “ஒண்டான்செட்ரான்” தடுப்பூசி விவகாரத்தில், சுகாதார அதிகாரிகள் தொடர்ந்து மௌனம் சாதிப்பது குறித்து விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் குறித்த தடுப்பூசியுடன் தொடர்புடைய மரணங்கள், நாடளாவிய ரீதியில் பல வைத்தியசாலைகளில் பதிவாகியுள்ளதாக அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

கண்டி தேசிய வைத்தியசாலையில் நடத்தப்பட்ட ஆரம்பகட்ட சோதனைகளில் , சில தடுப்பூசித் தொகுதிகளில் பக்டீரியா நச்சுகள் கண்டறியப்பட்டதாக மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையகம் கண்டறிந்துள்ளது.

இதேபோன்று சந்தேகத்திற்குரிய தடுப்பூசிகள் பயன்பாட்டிலிருந்து திரும்பப் பெறப்பட்டதாகவும், இதுகுறித்தான விளக்கம்

07

## லாப்ஸ் எரிவாயு ஏற்றிய கப்பல் நாட்டுக்கு வந்தது!

கொழும்பு, ஏப். 07

7000 மெற்றிக்தொன் லாப்ஸ் எரிவாயு நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக லாப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

எரிவாயுவை ஏற்றிய கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாகவும் அந்த நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுத் தெரிவித்துள்ளது.

இதனூடாக

07

## நீதியரசர்கள் ஓய்வு பெறும் வயதெல்லை அதிகரிக்காது!

### நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 07

உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உத்தியோகபூர்வமாக மறுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார,

07

## பொருளாதார நெருக்கடி நாடு முழுவதும் தீவிரம்!

### மூத்த பேராசிரியர் கெனடி குணவர்தன

கொழும்பு, ஏப். 07

மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவுகள் கட்டுக்கடங்காத அளவுக்கு உயர்ந்து, நாடு முழுவதும் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளதாக மூத்த பேராசிரியர் கெனடி குணவர்தன குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பு எதுல்கோட்டேயிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் எரிவாயு

07

## 9 எரிபொருள் கப்பல்கள் ஏப்ரல் மாதம் இலங்கைக்கு!

கொழும்பு, ஏப். 07

ஏப்ரல் மாதத்தில் 9 எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடைய உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்ட போர்ச் சூழலால் உருவான எரிசக்தி நெருக்கடியை அரசாங்கம் தற்போது வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்துள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

எனவே, விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்ட புதன்கிழமையை மீண்டும் வேலை நாளாக மாற்றுவதற்கும், கியூ.ஆர். முறைமை மற்றும் ஒற்றை-

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# டிஜிற்றல் பரிமாற்றத்துக்குள் நாங்கள் நுழைய வேண்டும்!

## ஜனாதிபதி அநுர வலியுறுத்து

கொழும்பு, ஏப். 07

சமூகத்தில் நிலவும் சில சிக்கலான பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டுமானால், ஒரு நாடாக நாம் டிஜிற்றல் பரிமாற்றங்களுக்குள் நுழைய வேண்டும் என வலியுறுத்திய ஜனாதிபதி, முறைசாரா பொருளாதாரத்தை முறைசார்ந்த பொருளாதாரமாக மாற்றுவதே தமது நோக்கம் என தெரிவித்தார்.

நாட்டின் டிஜிற்றல் பொருளாதாரத்தின் புதிய மைல்கல்லைக் குறிக்கும் வகையில், தேசிய கியூ.ஆர் கொடுப்பனவுகளைப் பிரபலப்படுத்தும் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

சமூகத்திற்குத் தேவையான வினைத்திறனான விடயங்களை உள்வாங்குவதற்கான ஊக்கத்தினை அதிகாரிகள் வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

துறைகளை டிஜிற்றல் மயமாக்குவதன் மூலம் 15 பில்லியன் டொலர் டிஜிற்றல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் இலக்கை அரசாங்கம் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் சிறந்த கலாசாரத்தைக் கொண்டுள்ள எமது சமூகத்தில், இந்தப் புதிய முறைகளை எவ்வாறு பிரபலப்படுத்துவது என்ற சவால் அரசாங்கத்திடம் உள்ளதாகவும் கூறினார்.

கியூ.ஆர் என்று சொன்னாலே மக்களின் நினைவுக்கு வருவது எது? எரிபொருளைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு கருவி. கியூ.ஆர் ஊடாக உரம் வழங்கப்படவுள்ளதாகக் கூறியபோது, உரத்தையும் குறைக்கப் போகிறார்கள் என்ற ஒரு கருத்து உருவானது.

இவ்வாறு கியூ.ஆர் என்பது இறுதியாக கட்டுப்படுத்துதல் என்ற ஒன்றிற்குள் சுருக்கப்பட்டுவிட்டது. எனவே கொடுக்கல் வாங்கல்களுக்கும் இது கொண்டு வரப்படும் போது, இதுவும் ஒரு கட்டுப்பாடா என்று மக்கள் நினைக்கக்கூடும். அதனால் இது குறித்து ஒரு விசேட விழிப்புணர்வுத் திட்டம் அவசியமானது.

ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையின் மூலம் எமது நாட்டில் ஞசு குறியீடுகள் ஊடாக இடம்பெறும் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் மிக வேகமாகப் பிரபலப்படுத்த முடியும் என நாம் நம்புகிறோம்.

இது தொடர்பில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குப் பாரிய பொறுப்பு உள்ளது. பல நிதி நிறுவனங்கள் இப்போது புத்தாண்டுக்கான விளம்பரங்களை உருவாக்கி வருகின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, புத்தாண்டு காலக் கொடுக்கல் வாங்கல்களை ஞசு குறியீடுகள் ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களாக மாற்ற முடிந்தால், அது ஒரு சிறந்த திருப்புமுனையாக அமையும்.

அப்போது மக்கள் அதனை ஏற்றுக்கொள்வார்கள். எமது சமூகம் புதிய விடயங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளது. ஆனால் புதிய விடயங்கள் கவர்ச்சிகரமானதாகவோ அல்லது இலகுவானதாகவோ இல்லாவிட்டால் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

# பெற்றோலிய விநியோகத்தர்கள் நேற்று அமைதிவழிப் போராட்டம்

கொழும்பு, ஏப். 07

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் தரகுப் பணம் மற்றும் இலாப வீதம் குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இலங்கை பெற்றோலிய விநியோகஸ்தர் சங்கம் நேற்று காலை அமைதிப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்திற்கு முன்பாக இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அந்தச் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுப் பணிப்பாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

தமக்கு வழங்கப்பட்டு வந்த 3 வீத தரகுப் பணம் தற்போது 1.5 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தனியார் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் 6 வீத இலாப வீதத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என விநியோகத்தர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மேலும், தற்போது நடைமுறையிலுள்ள "கியூ.ஆர்" குறியீடு மற்றும் வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையிலான எரிபொருள் விநியோக முறையினால் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# யாழில் இடிமின்னலுடன் மழை!



யாழ்ப்பாணம், ஏப். 07

யாழ்ப்பாணத்தில் மின்னல் தாக்கத்தினால் வீடொன்று சிறு சேதங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில், வீட்டில் இருந்தோர் தெய்வாதீனமாக காயங்கள் இன்றி தப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை பல இடங்களில் இடி மின்னல் உடன் கூடிய மழை பெய்தது.

இதன்போது, வடமராட்சி, கெருடாவில் பகுதியில் உள்ள வீடொன்றின் அருகில் நின்ற தென்னை மரத்தின் மீது மின்னல் தாக்கியதில் தென்னை மரம் தீப்பற்றி கொண்டதுடன் குறித்த மின்னல் தாக்கத்தால் வீட்டின் சுவர்களில் ஒட்டைகள் விழுந்துள்ளதுடன் ஜன்னல் மற்றும் கதவு நிலைகளும் சேதமடைந்தன.

இருந்த போதிலும் வீட்டில் இருந்தோர் காயங்கள் எதுவும் இன்றி தப்பித்துக்கொண்டனர்.

தென்னை மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகி எரிவதனை கண்ட அயலவர்கள் விரைந்து செயற்பட்டு தீயை அணைத்துள்ளனர்.

அதேவேளை, குறித்த மின்னல் தாக்கத்தினால் அயலவர்களின் தொலைக்காட்சி பெட்டி உள்ளிட்ட இலத்திரனியல் பொருள்கள் சிலவும் சேதமடைந்துள்ளன. (அ)

# சங்கானை வைத்தியசாலையை தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 07

சங்கானை பிரதேச வைத்தியசாலையை சங்கானைப் பட்டின அபிவிருத்தி சபை மற்றும் நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர்களின் அழைப்பில் குருசுவாமி சுரேந்திரனுடன் சென்று பார்வையிட்டதோடு வைத்தியசாலை அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலும் நடைபெற்றது.

ஏற்கனவே அங்கு நிறுவப்பட்டுள்ள ஸ்கானிங் இயந்திரத்தை இந்த வைத்தியசாலைக்கு பெற்றுக் கொடுப்பதற்கான முழு முயற்சிகளுக்கும் ஒத்தாசை வழங்கியதற்காக அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

இந்த ஸ்கானிங் இயந்திரம் கடும் முயற்சியின் காரணமாக கொடையாளரின் நிதியுதவியுடன் இந்த வைத்தியசாலையில் நிறுவப்பட்டது. ஸ்கானிங் தொழிற்பாடுகள் சரியாக நடைபெறவில்லை என்ற குறைபாடுகள் சில மக்களால் தெரிவிக்கப்பட்டு இருந்த நிலையில் அங்கு சென்று பார்வையிட்டு சங்கானை பிரதேச வைத்திய அதிகாரியுடனும் கலந்துரையாடப்பட்டபொழுது அச்சேவைகள் சிறப்பாக வைத்திய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்க கூடியதாக இருந்தது. கடந்த ஒரு மாதத்தில் 160 பேருக்கு மேற்பட்டோர் அதில் பயனடைந்திருக்கிறார்கள்.

மேலும் அங்கு மரணிப்பவர்களின் உடல்களை மருத்துவ நடவடிக்கைகளுக்காக பேணுவதற்கான குளிரூட்டல் சாதனம் இல்லை என்ற குறைபாடு அவதானிக்கப்பட்டது. அதனையும் கொடையாளர்களின் ஊடாக ரூபா 36 லட்சம் செலவில் கொள்வனவு செய்வதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# வேட்டை துப்பாக்கி வெடித்து ஒருவர் காயம்

நுவரெலியா, ஏப். 07

கினிகத்தேனை, பொல்பிட்டிய, பிடவள பகுதியில் வேட்டை துப்பாக்கி ஒன்று வெடித்ததில் ஒருவர் காயமடைந்தார்.

காலில் பலத்த காயம் ஏற்பட்டு கினிகத்தேனை பிரதேச மருத்துவமனையில் இவர் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இவர் தனது வீட்டுக்கு அருகிலுள்ள தோட்ட பகுதிக்கு விறகு சேகரிப்பதற்காக சென்றிருந்தபோது இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

இது குறித்து பொல்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வவுனியா குப்பை மேட்டுப் பிரச்னை பிரதியமைச்சர் தலைமையில் ஆராய்வு

வவுனியா, ஏப். 07

வவுனியா சாலம்பைக்குளத்தில் மாநகர சபை மற்றும் பிரதேச சபையினால் கொட்டப்படும் குப்பையின் காரணமாக அயலில் உள்ள சாலம்பைக்குளம் கிராம மக்கள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து குறிப்பிட்ட இடத்திற்கு நேற்று பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையிலான குழுவினர் நேரடியாக சென்று பார்வையிட்டனர்.

நீண்ட காலமாக குறித்த பகுதியில் குப்பை கொட்டப்பட்டு வரும் நிலையில் அதனை அண்டிய பகுதியில் கடந்த காலங்களில் சாலம்பைக்குளம் புதிய வீட்டு திட்டம் அமைத்து மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் கொட்டப்பட்டு வருகின்ற குப்பையில் இருந்து துர்நாற்றம் வீசுவதோடு அங்கு தீ வைக்கப்படுவதன் காரணமாக புகைமூட்டம் கிராமத்துக்குள் வருவதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் தொடர்ச்சியாக தெரிவித்து வந்திருந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுர்தீன், அரசாங்க அதிபர், சுற்றாடல் அதிகார சபையினர், வவுனியா மாநகர சபை ஆணையாளர், தமிழ் பிரதேச சபை தலைவர் உட்பட்ட குழுவினர் குறித்த பகுதிக்கு சென்று பார்வையிட்டதோடு இது தொடர்பான உடனடி நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடலை மேற்கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பண்டிகை காலத்தை முன்னிட்டு போக்குவரத்து விதிமுறை கடுமை

கொழும்பு, ஏப். 07

எதிர்வரும் பண்டிகைக்காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் போக்குவரத்து விதிகளை மிகவும் கடுமையான முறையில் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

போக்குவரத்துக் கட்டுப்பாட்டு மற்றும் வீதிப் பாது காப்பு பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர இதனை தெரிவித்துள் ளார்.

போக்குவரத்து விதிகள் முறையாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பண்டிகைக் காலத்தில் வீதியோரங்களிலுள்ள ஆடை விற்பனை நிலையங்கள் மற்றும் வர்த்தக மையங்களுக்கு வருகை தரும் நுகர்வோரினால் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்குப் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தமது வாடிக்கையாளர்களுக்குப் போதுமான வாகன தரிப்பிட வசதிகளை வழங்க வேண்டும் அல்லது மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

வீதியோரங்களில் முறையற்ற விதத்தில் வாகனங்களை நிறுத்துவதால் ஏற்படும் போக்குவரத்துத் தடைகளைத் தவிர்க்க விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வீதி ஒழுங்குமுறைகளை மீறுவோர், குறிப்பாக வாகன தரிப்பிட விதிகளைப் புறக்கணித்து வீதிகளில் வாகனங்களை நிறுத்துபவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி சட்டத்தை நிலைநாட்டுமாறு அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா மா அதிபர் சேனாதீர தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.04.2026 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களும் இலங்கை அரசியலும்

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு ஏழு வருடங்கள் கடந்தோடிவிட்டன. ஆனால், இலங்கையை மாத்திரமல்ல, உலகையே உலுக்கிய அந்த அனர்த்தத்தைப் பற்றிய முக்கியமான சில கேள்விகளுக்கு இன்னமும் விடை கிடைப்பதாக இல்லை.

இஸ்லாமிய அரசு இயக்கத்தின் சார்பில் தேசிய தௌஹீத் ஜமாத் இயக்கத்தின் தலைவர் சஹ்ரான் ஹாசிமும் அவரைப் பின்பற்றியவர்களும் அந்த பயங்கரத் தாக்குதல்களை நடத்தியதாகக் கூறப்பட்டது. தாக்குதல்களுக்கு பின்னால் சில வெளிநாட்டுச் சக்திகள் செயற்பட்டதாக அல்லது மக்கள் மத்தியில் தேசிய பாதுகாப்பு பற்றிய பீதியை ஏற்படுத்துவதன் மூலமாக ராஜபக்சாக்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்காக தற்கொலைக் குண்டுதாரிகளை சிலர் இயக்கியதாக நினைப்பவர்கள் இஸ்லாமிய அரசு இயக்கத் தின் சார்பில் தாக்குதல்கள் நடத்தப்பட்டது என்ற வாதத்தை ஏற்றுக் கொள் ளவில்லை.

இந்த குற்றச்சாட்டுக்கள், எதிர்க்குற்றச்சாட்டுக்கள் மற்றும் வாதங்கள் எல்லாமே பல்வேறு வகையான சதிக் கோட்பாடுகள் கிளம்புவதற்கு வழிவகுத்து பிரதான பிரச்னையைக் கிரகணம் செய்து விட்டன.

அதிகாரத்துக்கான வேட்கையில் அரசியல்வாதிகள் எந்தவொரு பிரச் னையையும் தங்களுக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்தத் தவறு வதில்லை. ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களும் அதற்கு விதிவிலக்காக எவ்வாறு இருக்க முடியும்?

குண்டுத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு நீதி கிடைக்கும் என்று நம்பி ஏமாற்றமடைந்து குழம்பிப் போயிருக்கிறார்கள். கடந்த ஏழு வருடங்களில் தற்போதைய தேசிய மக்களன் சக்தி அரசாங் கம் உட்பட நான்கு அரசாங்கங்கள் பதவியில் இருந்திருக்கின்றன.

ஒவ்வொரு அரசாங்கமுமே அதன் சொந்தத்தில் விசாரணைக் குழுக் களை நியமித்தன. அந்த குழுக்கள் அறிக்கைகளையும் கையளித்தன. ஆனால், அந்த அறிக்கைகளின் கண்டுபிடிப்புக்கள் அல்லது அவதானிப் புக்களின் அடிப்படையில் நடவடிக்கைகளை எடுப்பதில் சகல அரசாங்கங் களுமே தயக்கம் காட்டி வந்திருக்கின்றன என்பதே இன்றைய யதார்த்த நிலை.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உட்பட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களும் ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உட்பட கட்சியின் முக்கி யஸ்தர்களும் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் விரைவில் அம்பலப்படுத்தப்படுவார்கள் என்று அடிக்கடி கூறுகிறார்கள்.

உதய கம்மன்பில போன்ற அரசியல்வாதிகள் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் குறித்து "துப்பறியும் நாவல்களை" எழுதி வெளியிடுக் கொண்டிருக்கிறார்கள். சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் கம்மன் பிலவின் நூல் வெளியீட்டு நிகழ்வில் இலங்கையின் முக்கியமான அர சியல்வாதிகளினால் அரங்கம் நிரம்பி வழிந்தது. குண்டுத்தாக்குதல்கள் பற்றிய உண்மைகளை வெளிக்கொணர்வது என்பது அரசியல் வர்க்கத்தின் இடையூறுகளைத் தாண்டிச் சாதிக் கக்கூடிய ஒரு காரியமல்ல என்பதை அந்த நிகழ்வு உணர்த்தியது எனலாம்.

குண்டுத்தாக்குதல்கள் விவகாரத்தை கட்சி அரசியல் நலன்களுக்காக ஏட்டிக்குப் போட்டியாக பயன்படுத்துகின்ற போக்கு கைவிடப்படாவிட்டால் சூத்திரதாரிகளை கண்டறியும் முயற்சிகள் என்றென்றைக்கும் பயனளிக் காமல் போகக்கூடிய ஆபத்து இருக்கிறது.

# உட்கட்டமைப்பு மீது கைவைத்தால் அமெரிக்காவுக்கும் அதே கதிதான்!

## ட்ரம்ப்பின் அச்சுறுத்தலுக்கு ஈரான் பதிலடி

தெஹ்ரான், ஏப். 07

உட்கட்டமைப்புகள் மீது கைவைத்தால் அமெரிக்காவுக்கும் அதே கதிதான் ஏற்படும் என்று ட்ரம்ப்பின் அச்சுறுத்தலுக்கு ஈரான் பதிலடி கொடுத்துள்ளது.

ஈரான் மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான போர் அச்சுறுத்தல் தற்போது ஒரு மிகப்பெரிய உட்கட்டமைப்பு போராக உருவெடுத்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுத்த இறுதி எச்சரிக்கைக்கு, ஈரான் அதே பாணியில் நேரடி பதிலடி கொடுத்துள்ளது.

ஈரான் வெளிவிவகார அமைச்சின் ஊடகப்பேச்சாளர் இஸ்மாயில் பாகாய் கூறு கையில்,

"ஈரானின் உட்கட்டமைப்புகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், அதற்குப் பதிலாக அமெரிக்காவுக்குச் சொந்தமான அல்லது அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயல்படும் அதேபோன்ற உட்கட்டமைப்புகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தும்.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குத் துணைபோகும் எந்தவொரு சொத்துக்களும் ஈரானியப் படைகளின் இலக்குகளாக மாறும் என்று கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது "ஆக்ஸியோஸ" நேர்காணல் மற்றும் "ட்ரூத் சோஷியல" பதிவுகளில் மிகத் தீவிரமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

"ஈரான் உடன்பாட்டுக்கு வராவிட்டால், அங்குள்ள அனைத்தையும் நான் தகர்த்துவிடுவேன்"- என்று அவர் பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமைக்குள் ஈரானின் அனைத்து எரிசக்தி மற்றும் சிவில் உட்கட்டமைப்புகளையும் அமெரிக்கா முடக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

ஈரானின் மிகப்பெரிய பாலம் ஏற்கனவே தகர்க்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், "ஈரான் ஒரு சிறந்த நாடாக மாறுவதற்கு இன்னும் வாய்ப்பு இருக்கும்போதே உடன்பாட்டுக்கு வருவது நல்லது. இல்லையேல் அழிவைத் தவிர வேறு எதுவும் மிஞ்சாது"- எனக் கூறினார்.

ஒருபுறம் கடும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டாலும், மறுபுறம் பேச்சுவார்த்தைகள் தொடர்வதாக ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு "நல்ல வாய்ப்பு" இருப்பதாக அவர் நம்புவது, போர் தவிர்க்கப்படுவதற்கான ஒரு சிறிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

# குமார ஜயக்கொடி பதவி நீக்கப்படுவாரா? நம்பிக்கையில்லா தீர்மானம்மீது விவாதம்

கொழும்பு, ஏப். 07

தரமற்ற நிலக்கரி இறக்குமதி மற்றும் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் பதவியில் நீடிப்பது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம், வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் விவாதத்துக்கு வரவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சிகள் இந்தத் தீர்மானத்தை முன்னிறுத்தி அரசாங்கத்துக்கு எதிராக பாரிய அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளன. இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களுக்கிடையே கடந்த வாரம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

விவாதத்தின் போது அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து இதன்போது இறுதி முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் எழுந்துள்ள கடும் எதிர்ப்பு காரணமாக, நம்பிக்கையில்லா தீர்மான விவாதம் நடைபெறுவதற்கு முன்னதாகவே அவரை பதவியிலிருந்து நீக்குமாறு அரசாங்கத்தின் உட்புறத்திலிருந்தே ஜனாதிபதிக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் ஜனாதிபதி அவரை பதவியிலிருந்து நீக்க தயக்கம் காட்டிய போதிலும், கட்சிக்குள்ளும் அமைச்சரவைக்குள்ளும் ஏற்பட்ட கடுமையான அழுத்தம் கார ணமாக, குமார ஜயக்கொடிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி ஆலோ சித்துள்ளதாக தெரியவருகிறது.

ஆனால், அமைச்சர் குமார ஜயக்கொடி தனது பதவியை இராஜினாமா செய் தாலும் அல்லது நீக்கப்பட் டாலும், எதிர்க்கட்சிகள் தமது போராட்டத்தை கைவி டப் போவதில்லை எனவும் தெரியவருகிறது.

மறுபுறம் நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்துக்கு இணையாக, அரசாங்கத்தின் நிர்வாகத் தோல்விகளை அம்பலப்படுத்தும் வகையில் பல எதிர்ப்பு நடவடிக்கைகளை பாராளுமன்ற வளாகத்திலும் வெளியிலும் முன்னெடுக்க சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணி ஏற்கனவே திட்டமிட்டுள்ளது.

(எ)

# நல்லை ஆதீன சுவாமிகள் குருபூஜை

யாழ்ப்பாணம், ஏப். 07

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் "வாராந்த திருவிளையாடல் புராணச் சிறப்பு சொற்பொழிவும் மாதந்தோறும் ஈழத்துச் சமயப் பெரியார்கள் குருபூஜை விழாவும்" தொடர்- 11 நல்லை ஆதீன முதலாவது குருமகா சந்நிதானம் சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குருபூஜை விழா அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில், ஆன்மிக விருந்தினராக தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பித்தார்.

சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், இளஞ்சை வப்புலவர் த. மனோஜ்குமாரின் "சுவாமிநாத



தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் சமயப்பணி" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவும் நடைபெற்றது.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து ஆன்மிக விருந்தினர் உரையும் குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 07 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 24
நல்ல நேரம் : 7.31 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : பஞ்சமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சாதாரணமாகப் பேசப் போய் சண்டையில் முடியும். நெருங்கியவர்களிடம் உங்களின் மனக்குறைகளை சொல்லி ஆதங்கப் படுவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும் நாள்.

**இடபம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகளின் பெருமைகளை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். தாயாரின் உடல் நிலை சீராகும்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள்.

**கடகம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்துயோசிப்பீர்கள். செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**கன்னி**
சவால்களில் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். சொத்துப் பிரச்சினைக்கு சுமூக தீர்வு கிடைக்கும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். விலகிச் சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். அழகும் இளமையும் கூடும் .

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடைதாமதம் ஏற்படும். உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும்.

**தனுசு**
கணவன் மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் தாக்கிப் பேச வேண்டாம். சகோதர வகையில் ஆரோக்கியமான விவாதங்கள் வரும்.

**மகரம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

**கும்பம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதிய வரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். எதிர்பார்த்த வகையில் பணம் வரும். நவீன ரக மின்னணு மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள்.

# மருத்துவர்களின் பகிஷ்கரிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 07

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்த தொழிற் சங்க நடவடிக்கை நேற்றுத் திங்கட்கிழமை காலை 08. 00 மணி முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் தலையீடுகளின் அடிப்படையில் மருத்துவர்களின் இடமாற்றங்களை முன்னெடுப்பதை நிறுத்துதல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து இந்த பணிப்பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பான பிரச்னைகளை கலந்துரையாடுவதற்கு வரும் வியாழக்கிழமை சுகாதார அமைச்சருடன் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதால், போராட்டத்தை தற்காலிகமாக கைவிட தீர்மானித்ததாக சங்கத்தின் செயலாளர் பிரபாத் சுகததாஸ தெரிவித்தார்.

தற்போது வெளிநாடு சென்றுள்ள சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நாடு திரும்பியதும் குறித்த பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

(எ)

# தருமை ஆதீனத்தின் சைவ சித்தாந்த பட்டப்படிப்புகள் யாழில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஏப். 07

தென்னிந்திய தருமை ஆதீனத்தின் "சைவ சித்தாந்த கலாநிதி, சைவ சித்தாந்த புலவர்" ஆகிய பட்டப்படிப்புகளுக்கான தொடக்க விழா யாழ்ப்பா ணம் சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.தருமை ஆதீனம்27 ஆவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் நேரடித் தரிசன அருளாசியோடு இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சிறீ சற்குணராஜா, யாழ். பல்கலைக் கழக இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி பிரம்மசிறீ ச. பத்மநாபக்குருக்கள், கலாநிதி ஆறு திருமுருகன், வேலன் சுவாமிகள், சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன், சைவ பரிபாலனசபை தலைவர் உ. தயானந்தன், தருமபுர ஆதீன அனைத்துலக சைவ சித்தாந்த ஆராச்சி நிறுவன இயக்குநர் பேராசிரியர் அருணை பாலறா வாயன், இந்துக் குருமார் ஒன்றிய தலைவர் க. வைத்தீஸ்வர குருக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# காங்கேசன்துறை தொடக்கம் மன்னார் கடல் பிராந்தியங்களில் கடும் மழை

கொழும்பு, ஏப். 07

காங்கேசன்துறை தொடக்கம் மன்னார் கடல் பிராந்தியங்களில் கடும் மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் பல இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களின் பல இடங்களிலும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மேல் மாகாண கரையோரப் பிரதேசங்களிலும் அத்துடன் புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களிலும் காலை வேளையில் மழை பெய்யக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

காங்கேசன்துறை தொடக்கம் மன்னார், புத்தளம், கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 25 - 35 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் தென்மேற்குத் திசையில் இருந்து அல்லது மேற்குத் திசையில் இருந்து காற்று வீசும்.

காலி தொடக்கம் மாத்தறை, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 40 - 45 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாக காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சிகிச்சையளித்த பெண் மருத்துவரை துஷ்பிரயோகம் செய்வதற்கு முயற்சி

கண்டி, ஏப். 07

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கில், மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்து வரும் கைதி ஒருவர், பெண் மருத்துவர் ஒருவரை துஷ்பிரயோகம் செய்ய முயன்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி- பல்லேகலை தும்பறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தக் கைதிக்கு சிகிச்சையளிப்பதற்காக, சிறைச்சாலை மருத்துவமனைக்கு பெண் மருத்துவர் ஒருவர் சென்றுள்ளார். இதன்போது, பரிசோதனை செய்து கொண்டிருந்த வேளையில், குறித்த கைதி திடீரென மருத்துவரை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்துள்ளார்.

சம்பவம் நடந்த உடனே அங்கிருந்த சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களும், மருத்துவமனை ஊழியர்களும் உடனடியாக செயல்பட்டு கைதியை கட்டுப்படுத்தினர். இதனால், பெண் மருத்துவர் எந்தவித ஆபத்துமின்றி பாதுகாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல்லேகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். வித்தியா கொலை வழக்கில் தண்டனை பெற்ற முக்கிய குற்றவாளிகளில் ஒருவரே இவ்வாறு அநாகரிகமாக நடந்துகொண்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மின்கட்டண அதிகரிப்பு எச்சரிக்கை: அரசின் நிலைத்தன்மைக்கு பாதிப்பு

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 07

தரம் குறைந்த நிலக்கரியை கொண்டு வந்திருக்காவிட்டால் மின்சார கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. அதேநேரம் அரசாங்கம் மீண்டும் மின்சார கட்டண அதிகரிப்புக்கு செல்ல முற்பட்டால் அது அரசாங்கத்தின் இருப்புக்கே பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

“தரம் குறைந்த நிலக்கரியை கொண்டுவந்த கம்பனிகளுக்கு எதிராக தண்டப்பணம் விதிக்கக்கூடாது. அவ்வாறு மேற்கொண்டால், அந்த கம்பனிகள் நிலக்கரி இறக்குமதி செய்வதை நிறுத்தும் அபாயம் இருக்கிறது. அப்படியானால் பெரும் பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருக்கிறார். இது திருட்டு செயலுக்கு ஆதரவ ளிப்பதாகும். அரசாங்கம் இவ் வாறு செயல்படுவதாக இருந் தால், இவர்களுக்கு அந்த கம்ப னிகளுடன் ஏதாவது டீல் இருக்க வேண்டும்.”- என்றார். (எ)

# சீனப்பெண் படுகொலை: சந்தேகநபர் சிக்கினார்

கொழும்பு, ஏப். 07

கொஹூவலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுபோவில பகுதியில் உள்ள வீடமைப்பு தொகுதி ஒன்றில், வெளிநாட்டு பெண் ஒருவர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேகநபர்கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், நேற்று முன் தினம் கொள்ளுப்பிட்டி சிறீமத் அனகாரிக தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் 26 வயது சீனப் பிரஜை என அடையாளம் காணப்பட்டார்.

இதன் போது சந்தேகநபரிடமிருந்து 03 கமராக்கள் மற்றும் 02 கிராம் 20 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

# விபச்சார விடுதி முற்றுகை ஏழு பெண்கள் கைதாகினர்

கொழும்பு, ஏப். 07

சீதுவை நகரில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிவந்த விபச்சார விடுதியை பொலிஸார் முற்றுகையிட்டனர். இதன்போது விடுதியின் முகாமையாளர் மற்றும் 07 பெண்கள் உட்பட 08 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட பெண்கள் 22 முதல் 39 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், அவர்கள் கந்தானை, கம்பஹா, கினிகத்தேனை, மாத்தளை, குருநாகல், பதுளை மற்றும் நாவலப்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# நாட்டின் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாக குறைவு

கொழும்பு, ஏப். 07

தற்போது நிலவும் வறட்சியான காலநிலையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாக குறைவடைந்தன. இதன் காரணமாக லபுகம மற்றும் கலடுவாவ நீர்த்தேக்கங்களில் இருந்து நீர் விநியோகிக்கப்படும் கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் கால அட்டவணைக்கு அமைவாக நீர் விநியோகத்தை முன்னெடுக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியால் ஏற்பட்டுள்ள நீர் தட்டுப்பாட்டை நிர்வகிப்பதற்கு ஆதரவாக, மட் டக்களப்பு மாநகர சபையின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சுகாதார திணைக்க ளத்தினால் புதிய நீர் விநியோக பவுசர்வாகனம் ஒன்று நன்கொடை யாக வழங்கப்பட்டுள்ளது.

(எ)

# தெற்கு அதிவேக வீதியில் கோர விபத்து- சாரதி பலி

கொழும்பு, ஏப். 07

தெற்கு அதிவேக வீதியில் வெலிப்பன்ன பகுதிக்கு அருகில், முன்னால் பயணித்த கனரக வாகனத்துடன் பின்னால் வந்த லொறி மோதி கோர விபத்து ஏற்பட்டது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்த விபத்தில் லொறி சாரதி உயிரிழந்தார்.

தொடாங்கொடை மற்றும் வெலிப்பன்ன பகுதிகளுக்கு இடைப்பட்ட 40 ஆவது மைல்கல் அருகே இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்தை தொடர்ந்து மாத்தறை நோக்கிய திசையில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (எ)

# 826 லீற்றர் டீசலுடன் இருவர் கைதாகினர்

கொழும்பு, ஏப். 07

கொழும்பு- மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டி. ஆர். விஜேவர்தன மாவத்தையில் டீசல் பதுக்கி வைத்திருந்த இருவர் கொழும்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து 826 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர்களிடமிருந்து எரிபொருள் விற்பனை மூலம் ஈட்டப் பட்டதாக சந்தேகிக்கப்படும் 72, 210 ரூபாய் பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

# அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு மண்டியிடும் அநுர அரசாங்கம்

## இரகசிய இராணுவ ஒப்பந்தங்களை உடன் பகிரங்கப்படுத்த வேண்டும்

கொழும்பு, ஏப். 07

அமெரிக்காவின் ஏகாதிபத்தியத் தேவைகளுக்காக உலக நாடுகளின் இறையாண்மை சிதைக்கப்பட்டு வரும் நிலையில், இலங்கையின் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் மேற்கொண்டுள்ள இரகசிய இராணுவ ஒப்பந்தங்களை நாட்டு மக்களுக்கு மறைத்து, அந்த நாடுகளுக்கு அடிபணிந்து செயல்படுகின்றது என மக்கள் போராட்ட இயக்கத்தின் செயல்குழு உறுப்பினர் வசந்த முதலிகே குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு முன்பாக நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்ட கண்டனப் போராட்டத்தின் போது, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொத்து, ரைஸ், சோற்று பொதி 20 ரூபாயால் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 07

நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் கொத்து, ப்ரைட் ரைஸ் மற்றும் சோற்றுப் பொதியின் விலைகள் 20 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பு காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சிற்றுண்டிச் சாலை உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதேநேரம் ஏனைய சிற்றுண்டிகளின் விலைகள் 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளன என்று அந்த சங்கத்தின் தலைவர் ஹர்சன ருக்ஷன் தெரிவித்தார்.

தேங்காய் எண்ணெய் விலை குறைவடைந்தமையால் ஏனைய சிற்றுண்டிகளின் விலைகள் 10 ரூபாயால் குறைக்கப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார். (எ)

# நிலக்கரி விலைமனு கோரலுக்கு அழைப்பு

கொழும்பு, ஏப். 07

2026ஃ2027 காலப்பகுதிக்காக நுரைச்சோலை லக்விஜய மின்நிலையத்துக்கு நிலக்கரி விநியோகஸ்தர் ஒருவரை தெரிவு செய்வதற்கான விலைமனு கோரலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2026 செப்ரெம்பர் முதல் 2027 ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் 2.28 மில்லியன் மெட்ரிக் தொன் நிலக்கரியைக் கொள்வனவு செய்வதற்காக இந்த விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன என்று லங்கா நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

லக்விஜய மின்நிலையத்தின் 2026ஃ2027 காலப்பகுதிக்கான விநியோகஸ்தரை தெரிவு செய்வதற்கான இந்த விலைமனு கோரல், லங்கா நிலக்கரி நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விலைமனு கோரல்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, 38 கப்பல்கள் மூலம் இந்த நிலக்கரி விநியோகம் செய்யப்பட வேண்டும். 2026 ஆம் ஆண்டில் 20 கப்பல்களும், 2027 ஆம் ஆண்டில் 18 கப்பல்களுமாக இந்த விநியோகம் அமைய வேண்டும் என்பதுடன், 210 நாட்களுக்குள் அனைத்து விநியோக நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட வேண்டும் என அந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழங்கப்படும் நிலக்கரியின் தரம் மற்றும் விலைமனு கோரல்களை முன்வைக்கும் நிறுவனங்களின் பொறுப்புக்கூறல் மற்றும் செயல்பாடுகள் தொடர்பாகவும் லங்கா நிலக்கரி நிறுவனம் இந்த விலைமனு கோரல் மூலம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

## ஆற்று நீரினுள் இளைஞர்கள் கரப்பந்தாட்டம்

திருகோணமலை, ஏப். 07

திருகோணமலை, கிண்ணியா பகுதியில் தற்போது நிலவி வரும் கடும் வெப்பநிலை காரணமாக, இளைஞர்கள் ஆற்று நீரினுள் இறங்கி கரப்பந்தாட்டம் விளையாடி வருகின்றனர்.

வித்தியாசமான முறையில் நீரினுள் விளையாடப்படும் இந்த விளையாட்டைப் அப்பகுதி மக்கள் மற்றும் பாதசாரிகள் ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்து ரசித்து வருகின்றனர். இயற்கை எழில் கொஞ்சும் ஆற்றுப் பின்னணியில் இளைஞர்களின் இந்த உற்சாகமான விளையாட்டு, தற்போது சமூக வலைத்தளங்களிலும் வைரலாகி வருகின்றது. (எ)

## தொழிற்சாலையில் தீப்பரவல்!

கொழும்பு, ஏப். 07

வத்தளை, மாபோல தூவவத்தை பகுதியில் அமைந்துள்ள மெழுகுத் துணி உற்பத்தி தொழிற்சாலையில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டது.

கொழும்பு தீயணைப்பு பிரிவைச் சேர்ந்த 13 அதிகாரிகள் மற்றும் 3 தீயணைப்பு வாகனங்கள் தீயைக் கட்டுப்படுத்த ஈடுபடுத்தப்பட்டதாக தீயணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தீ முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தீயணைப்பு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி!

பதுளை, ஏப். 07

தியுலபெலஸ்ஸ, தெல்தெனியாய 16ஆம் கால்வாய் பகுதியில் உள்ள வயல் நிலமொன்றில் நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்த 23 வயது இளைஞன் ஒருவர், ஞாயிற்றுக்கிழமை மாலை சட்டவிரோத மின்சார கம்பியில் சிக்கி உயிரிழந்தார்.

தியுலபெலஸ்ஸ, வேவபிட்டிய பகுதியை சேர்ந்த தென்னக்கோன் டில்ஷான் ரஞ்சன என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

யாரோ ஒருவரால் குறித்த வயல் நிலத்தில் சட்டவிரோதமான முறையில் இழுக்கப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கியதாலேயே இந்த விபத்து நேர்ந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

*11 கோடி ரூபாய் பெறுமதியான*

# குஷ் ரக போதைப்பொருளுடன் நேற்றுக்காலை ஒருவர் கைது




கொழும்பு, ஏப். 07

சுமார் 11 கோடியே 34 இலட்சம் ரூபாய் பெறுமதியான குஷ் ரக போதைப்பொருளை நாட்டுக்குள் கடத்தி வர முயன்ற இலங்கையர் ஒருவர், நேற்றுத் திங்கட்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் கொழும்பு, கொம்பனித்தெரு பகுதியைச் சேர்ந்த, 45 வயதுடைய கூலித் தொழிலாளி என தெரியவந்துள்ளது.

இவர் திங்கட்கிழமை காலை இந்தியாவின் புதுடில்லியில் இருந்து ஏர் இந்தியா நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

குறித்த நபர் தான் கொண்டு வந்த போதைப்பொருள் அடங்கிய பயணப் பொதியை, விமான நிலையத்தின் பொதி விநியோக பகுதியில் கைவிட்டு தப்பியோட முயன்றபோது, சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார்.

சோதனையின் போது, அந்த பயணப் பொதியிலிருந்த 12 சொக்லேட் பைக்கற்றுகளுக்குள் இருந்த சொக்லேட்களை அகற்றிவிட்டு, அதற்கு பதிலாக 11 கிலோ 340 கிராம் எடையுடைய "குஷ்" போதைப்பொருளை சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபரையும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களையும் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# கடும் வறட்சியால் தொடரும் நீர்வெட்டு

கொழும்பு, ஏப். 07

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக மேற்கொள்ளப்படும் நீர் விநியோக முகாமைத்துவத்துக்கு அமைய, பெலன்வத்தை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் நீர் விநியோகத் தடையை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லபுகம மற்றும் கலடுவாவ நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நீர் மட்டம் வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

இந்த நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் நீர் விநியோகிக்கப்படும் பகுதிகளுக்கு இவ்வாறு நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படவுள்ளதுடன், ஹோமாகம மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் 12 மணி நேர நீர் வெட்டு அமுல்படுத்தப்படும் என்றும் அந்த சபை தெரிவித்துள்ளது. (எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 617 பேர் கைது

கொழும்பு, ஏப். 07

நாடளாவிய ரீதியில் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 617 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 28, 308 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 27 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 205 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 145 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மது போதையில் வாகனம் செலுத்திய 169 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 48 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,307 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அமைதி ஒப்பந்தம் குறித்து ஈரான் -அமெரிக்கா பேச்சு

வாஷிங்டன், ஏப். 07

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான மோதல்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கான திட்ட வரைபு ஒன்றை பெற்றுள்ளதாகவும், அது நடைமுறைக்கு வந்து ஹோர்முஸ் நீரிணை மீண்டும் திறக்கப்படுவதற்கு வழிவகுக்கும் என்றும் தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரொயிட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின்படி, மோதல்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒரு கட்டமைப்பை பாகிஸ்தான் தயாரித்துள்ளது.

இது ஈரான் மற்றும் அமெரிக்காவுக்கு வழங்கப்பட்டது.

இந்தத் திட்டம் இரண்டு கட்ட அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது என்றும், முதலில் உடனடி போர் நிறுத்தமும் அதைத் தொடர்ந்து ஒரு விரிவான உடன்படிக்கையும் எட்டப்படும் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகட்ட புரிந்துணர்வு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமாக வடிவமைக்கப்படும் என்றும், பேச்சுவார்த்தைகளின் ஒரே தகவல் தொடர்பு ஊடகமாக இருக்கும் பாகிஸ்தான் ஊடாக இது இறுதி செய்யப்படும் என்றும் கூறப்பட்டுள்ளதாக ரொயிட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கும், முடக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களை விடுவிப்பதற்கும் ஈடாக, அணு ஆயுதங்களை உருவாக்க மாட்டோம் என்று ஈரான் உறுதியளிப்பதை இந்த ஒப்பந்தம் உள்ளடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் ரொய்ட்டர்ஸ் வெளியிட்டுள்ள இந்த செய்தி இருநாடுகள் ஊடாகவும் இதுவரை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தரமற்ற மருந்துகள்...

எதுவும் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முறையான மேற்பார்வையின்றி இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டால், நாட்டின் சுகாதார அமைப்பு கடுமையான நெருக்கடியை எதிர்கொள்ளக்கூடும் என்று வைத்திய நிபுணர் எச்சரித்துள்ளார்.

மேலும், அதிகாரிகள் அதிக வெளிப்படைத்தன்மையுடனும் பொறுப்புணர்வுடனும் செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## ஈஸ்டர் தாக்குதல்...

சூத்திரதாரி யார் என்பதை வெளிப்படுத்தி நான் எழுதிய புத்தகத்திற்கு பல்வேறு தரப்பினரிடமிருந்து அவதூறுப் பிரசாரங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனினும், இந்தப் புத்தகத்தின் முடிவுகள் தவறானவை என்றோ அல்லது அதில் முன்வைக்கப்பட்டுள்ள வாதங்கள் பொய்யானவை என்றோ இதுவரை எவராலும் நிரூபிக்க முடியவில்லை.

முஜிபுர் ரஹ்மான் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினராக இருந்தாலும், அவரது சித்தாந்தம் இன்னும் ஜே.வி.பி உடனேயே இருக்கிறது. 1999 ஜனாதிபதித் தேர்தலின் போது அவர் ஜே.வி.பிக்கு ஆதரவளித்திருந்தார். 2019 ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் போது, இந்தியாவில் உள்ள ஐ.எஸ். பயங்கரவாதி ஒருவருடன் முஜிபுர் ரஹ்மான் தொடர்பில் இருந்தமை தெரிய வந்தது. ஆனால் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தலையிட்டு அந்த விசாரணைகளை நிறுத்தியிருந்தார். கடந்த 2024ஆம் ஆண்டு இந்தியாவில் கைது செய்யப்பட்ட நான்கு ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளும் முஜிபுர் ரஹ்மானுடன் தொடர்புகளைப் பேணிய செயின் மௌலானாவுடன் தொடர்பில் இருந்ததாகத் தகவல் கிடைத்துள்ளது.

2016 ஆம் ஆண்டு அப்போதைய நீதி அமைச்சராக இருந்த விஜயதாஸ ராஜபக்ஷ, 32 இலங்கை இலங்கையர்கள் சிரியாவுக்குச் சென்று ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் இணைந்துள்ளதாகக் கூறியபோது, முஜிபுர் ரஹ்மான் அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். அந்த எதிர்ப்பின் காரணமாக விஜயதாஸ ராஜபக்ஷ தனது அமைச்சர் பதவியையும் இழக்க நேரிட்டது. இஸ்லாமிய தீவிரவாதம் குறித்த விசாரணைகளைத் தடுக்க முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட முஸ்லிம் எம்.பிக்கள் அழுத்தம் கொடுத்திருந்தனர். ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் இரத்தம் முஜிபுர் ரஹ்மானின் கைகளில் படிந்துள்ளது. தயவு செய்து இனிமேலும் தீவிரவாதத்தைப் போஷிக்க வேண்டாம் என அவரிடம் கேட்டுக்கொள்கிறேன்-என்றார். (அ)

## வெப்பநிலை...

நீர்நிலைகளில் இருந்து நீர் ஆவியாவதன் மூலம் போதிய அளவு மழை மேகங்கள் உருவாகாவிட்டால், நிலவும் வெப்பத்தின் அளவு இன்னும் அதிகரிக்கக்கூடும்.

சூரிய கதிர்வீச்சு உடலில் ஊடுருவுவதைத் தவிர்ப்பதற்காகவும் உடல் வெப்பத்தை உறிஞ்சுவதைக் குறைக்கவும் வெள்ளை நிற அல்லது வெளிர் நிற ஆடைகளை அணியுங்கள். உடலில் அதிக சோர்வை ஏற்படுத்தக்கூடிய கடினமான வேலைகளில் ஈடுபடுவதை இயன்றவரை தவிர்த்துக்கொள்ளுங்கள்-என்றார். (அ)

## 9 எரிபொருள் கப்பல்கள்...

இரட்டை இலக்க முறைமைகளை நீக்கி நிலைமையை வழமைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் கூறினார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் ஏற்கனவே புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தினோம். ஆரம்பத்தில் ஓரிரு வாரங்கள் சிரமங்கள் இருந்தன, வரிசைகள் உருவானது உண்மைதான்.

இதனால் உடனடி நடவடிக்கையாக ஞசு முறைமை மற்றும் ஒற்றை-இரட்டை இலக்க விநியோக முறையை அறிமுகப்படுத்தினோம்.

புதன்கிழமையை விடுமுறை நாளாக அறிவித்தோம். தற்போது வரிசைகளை இல்லாமல் செய்துள்ளோம். கியூ.ஆர். மற்றும் ஒற்றை-இரட்டை முறைமைகள் தற்போது சிறப்பாகச் செயற்படுகின்றன.

இன்னும் சில நாள்களில் அந்த முறைகள் தேவையில்லை என்றால்,அவற்றை நீக்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

புதன்கிழமை விடுமுறையைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. நிலைமை சீரானதும் தேவையேற்படும் போது மீண்டும் வேலைகளை ஆரம்பிப்போம்.

எரிபொருள் கப்பல்கள் வருவதில் தாமதம் ஏற்பட்டதாலேயே அந்த நேரத்தில் அத்தகைய முடிவுகளை எடுத்தோம். ஆனால் இப்போது அச்சப்படத் தேவையில்லை.

ஏப்ரல் மாதத்தில் மேலும் 9 கப்பல்கள் வரவுள்ளன-என்றார். (அ)

# பொது போக்குவரத்துத்துறை மேம்பாடு ரஷ்யா-இலங்கை இடையில் ஒப்பந்தம்!

கொழும்பு, ஏப். 07

இலங்கையில் பொதுப் போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதற்கும், நவீன தொழில்நுட்ப முறைமைகளில் பயிற்சிகளை விரிவுபடுத்துவதற்குமாக ரஷ்யாவுக்கும், இலங்கைக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.



ரஷ்யாவில் நடைபெற்ற சர்வதேச போக்குவரத்து மற்றும் போக்குவரத்து ஏற்பாட்டு மாநாட்டின் போது, ரஷ்ய போக்குவரத்து அமைச்சுக்கும் இலங்கை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவும், ரஷ்ய போக்குவரத்து அமைச்சர் ஆண்ட்ரே நிகிடினும் இருநாடுகளின் சார்பிலும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தின் படி, இரு நாடுகளும் போக்குவரத்துத் துறையில் பயிற்சி மற்றும் மனிதவள மேம்பாட்டில் இணைந்து பயணிப்பதற்குத் தீர்மானித்துள்ளன.

பன்முனைப் போக்குவரத்து மையங்கள், நகர்ப்புற மற்றும் பிராந்தியப் போக்குவரத்து அமைப்புகள், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் முகாமைத்துவம், வீதிப் பாதுகாப்பு, போக்குவரத்துச் சட்டம் மற்றும் பொருளாதாரம், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, எண்ணிமமயமாக்கல் மற்றும் உலகளாவிய போக்குவரத்துப் போட்டித்திறன் உட்பட முக்கிய துறைகளில் கல்வி மாநாடுகள், பயிலரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்வதற்கும், பணியாளர் பகிர்வு உட்பட இணைந்து செயற்படுவதற்கும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளும் இணங்கிக் கொண்டுள்ளன.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வுக்கு முன்னதாக இரு நாடுகளினதும் போக்குவரத்து அமைச்சர்களுக்கிடையிலான சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றது.

அந்தச் சந்திப்பின் போது,

கொழும்பிலிருந்து அவிசவெல்லா வரையிலான 60 கிலோமீட்டர் நீளமுள்ள களனிப் பள்ளத்தாக்கு புகையிரதப் பாதையைப் புனரமைக்கும் முன்மொழியப்பட்ட திட்டம் உட்பட, புகையிரத்துறை ஒத்துழைப்பு குறித்து ஆராயப்பட்டது.

புகையிரத் துறை நவீனமயமாக்கல், புகையிர்ப் பெட்டிகள் வழங்கல் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றில் ரஷ்ய நிறுவனங்களின் பங்களிப்புக்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன்,

போக்குவரத்துக் கல்வி மற்றும் பணியாளர் பயிற்சிக்கு ஆதரவளிக்கும் வகையில், கொழும்பில் ரஷ்ய போக்குவரத்துப் பல்கலைக்கழகத்தின் கிளை ஒன்றை நிறுவவும் ரஷ்யத் தரப்பு முன்மொழிந்தது.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான விமானப் பயணிகள் போக்குவரத்தை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை இரு தரப்பினரும் ஆராய்ந்தனர். (ஒ)

## எரிபொருள், உரம் பெறு...

தடைகளை அமெரிக்கா அண்மையில் தளர்த்தியுள்ள சூழலில், அமைச்சரின் இந்தப் பயணம் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. (அ)

## பொருளாதார நெருக்கடி...

உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளின் கட்டண உயர்வுகள் பொதுமக்களை தாங்க முடியாத சுமைக்கு உட்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

நாட்டின் மக்கள்தொகையில் ஒரு பெரிய பகுதி கடுமையான பொருளாதார துயரத்தில் தள்ளப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ளோர் வறுமையின் விளிம்பில் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச சந்தை விலை உயர்வுகள் உள்ளூர் விலைகளை பாதிக்காது என முன்பு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் முற்றிலும் தவறானவை எனவும் அவர் விமர்சித்தார்.

எரிவாயு விலை உயர்வு தொடர்பாக கருத்து தெரிவித்த அவர், இது மத்திய கிழக்கு மோதலின் விளைவாக அல்ல என்றும், யுத்தம் ஆரம்பிக்கும் முன்னரே நாட்டில் விநியோக சிக்கல்கள் இருந்ததாகவும் கூறினார்.

புதிய நிறுவனத்துக்கு விநியோகம் ஒப்படைக்கப்பட்ட போதிலும், அதன் திறன் குறித்து அரசாங்கம் உரிய ஆய்வு மேற்கொள்ளவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

ஹோர்முஸ் நீரிணை மூடப்படக்கூடிய அபாயம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்கூட்டியே எச்சரித்திருந்த போதிலும், அரசாங்கம் அதனை அலட்சியப்படுத்தியதாகவும், தற்போது அதன் விளைவுகளை சந்தித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## லாப்ஸ் எரிவாயு ஏற்றிய...

நாடு முழுவதிலுமுள்ள தனது வாடிக்கையாளர்களுக்குத் தேவையான சமையல் எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்க முடியும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, பண்டிகை காலத்தில் பற்றாக்குறை இன்றி லாப்ஸ் எரிவாயு விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்தின் எஸ்.எச்.வி. எனர்ஜி நிறுவனத்திடமிருந்து குறித்த எரிவாயு பெறப்பட்டுள்ளது.

தற்போதைய உலகளாவிய புவிசார் அரசியல் மற்றும் விநியோகச் சங்கிலி சவால்களுக்கு மத்தியிலும், வலுவான சர்வதேச கூட்டாண்மைகள் மூலம் விநியோகத்தைப் பாதுகாப்பதில் லாப்ஸ் நிறுவனம் தொடர்ந்து கவனம் செலுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இந்திய துணை ஜனாதிபதி...

இதன்போது, இலங்கையில் ஏற்கனவே நிறைவடைந்துள்ள இந்திய நிதியுதவித் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் இந்திய தூதரகத்தின் அபிவிருத்தி ஒத்துழைப்பு ஆலோசகர் மைத்ரேய் குல்கர்னி, அரசியல் ஆலோசகர் கலாநிதி ராம்பாபு மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் காமகே உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நீதியரசர்கள் ஓய்வு...

"அமைச்சரவையில் இது தொடர்பாக எந்தவொரு கலந்துரையாடலும் நடைபெறவில்லை. எனவே, அரசியல் ரீதியாக முன்வைக்கப்படும் இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை நான் நிராகரிக்க வேண்டிய அவசியம் கூட இல்லை" எனத் தெரிவித்தார்.

அரசாங்கம் நீதித்துறையின் தற்போதைய கட்டமைப்பில் தலையிடவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் அண்மையில் விடுத்திருந்த அறிக்கையில், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் முன்மொழிவு அரசியலமைப்பின் 12(1) உறுப்புரையை மீறும் செயல் எனத் தெரிவித்திருந்தனர்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் எனும் கோட்பாட்டிற்கு இது முரணானது என்றும் அவர்கள் வாதிட்டனர்.

இலங்கை அரசியலமைப்பின் 107 ஆவது உறுப்புரையின் கீழ், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் பதவிக்காலம் மற்றும் சுதந்திரம் தொடர்பான பாதுகாப்புகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் 107(5) உறுப்புரையின்படி, உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயது 65 ஆகும்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயது 63 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறையின் சுதந்திரத்தைப் பேணுவதற்காக இந்த வயது எல்லைகள் அரசியலமைப்பில் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

இதில் ஏதேனும் மாற்றங்களை மேற்கொள்வதாயின், அதற்கு முறையான அரசியலமைப்பு திருத்தம் அவசியமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில் அத்தகைய எந்தவொரு நகர்வையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என நீதி அமைச்சு மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## சுற்றிவளைப்புகள் மூலம் 5 கோடி ரூபா அபராதம்!

கொழும்பு, ஏப். 07

இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் மாத்திரம் நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்ட ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றிவளைப்புகளின் மூலம், சுமார் 5 கோடி ரூபா அபராதம் அறவிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட 5,172 சுற்றிவளைப்புத் தேடுதல்களின் ஊடாக, இவ்வாறு 49.9 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் பதில் பணிப்பாளர் நாயகம் சமந்த கருணாரத்ன தெரிவித்துள்ளார்.


குறிப்பாக, அரிசி விற்பனை தொடர்பில் மாத்திரம் 359 முறைப்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்தமை மற்றும் சந்தையில் தட்டுப்பாட்டை உருவாக்கும் வகையில் கையிருப்புகளைப் பதுக்கி வைத்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழேயே இந்தச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர் சுரண்டப்படுவதைத் தடுக்கும் நோக்கில், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு வருவதுடன், இதற்காக நாடு முழுவதும் சுமார் 450 அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வர்த்தக நடவடிக்கைகளில் ஏதேனும் முறைகேடுகள் அல்லது அநீதிகள் இழைக்கப்பட்டால், 1977 என்ற உடனடித் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. (அ)

# அநுர அரசின் போக்கு குறித்து நாமல் எம்.பி. கடும் விமர்சனம்!



### இரட்டை நிலைப்பாடு என்றும் சாடல்

கொழும்பு, ஏப். 07

தற்போதைய அரசாங்கத்தின் அரசியல் போக்குகள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

அரசாங்கத் தரப்பினரும் ஜே.வி.பி. உறுப்பினர்களும் சொத்துக்களை வைத்திருந்தால், அவற்றை "சமூக மூலதனம்" எனக் கூறி நியாயப்படுத்துகின்றனர் என்றும், ஆனால் எதிர்க்கட்சியினரின் அல்லது அரச ஊழியர்களின் சொத்துக்கள் உடனடியாக "திருட்டுச் சொத்துக்கள்" எனக் குற்றம் சாட்டப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். இது தெளிவான இரட்டை நிலைப்பாடு எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

கடந்த காலங்களில் தமக்கு எதிராக முன்வைக்கப்பட்ட உகாண்டாவிற்கு 18 பில்லியன் அமெரிக்க டொலர் கொண்டு சென்றதாகவும், தங்கக் குதிரைகள் மற்றும் லம்போகினி கார்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளும் வெறும் பொய்களாக தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றது அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் முன்பு வகித்த பதவிகளில் எடுத்த தீர்மானங்கள் குறித்தும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மக்களின் பொருளாதாரச் சுமைகள் அதிகரித்துள்ள நிலையில், மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொருள் விலையேற்றம் காரணமாக பொதுமக்கள் கடும் துயரத்தை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும், அரசாங்கம் போதுமான நிவாரணங்களை வழங்கத் தவறியுள்ளது என்றும் அவர் சாடினார்.

கொரோனா பரவல் காலத்தில் தமது அரசாங்கம் மக்களுக்கு 5,000 ரூபாய் நிவாரணம் வழங்கியதை நினைவூட்டிய அவர், தமக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகள் மற்றும் குற்றச்சாட்டுகள் மூலம் உண்மை வெளிவரும் என்றும், தனது பெயர் மற்றும் கௌரவத்தை பாதுகாக்கும் வாய்ப்பாகவே தாம் இதனை கருதுவதாகவும் தெரிவித்தார். (அ)

## பாராளுமன்றம் இன்று கூடும்

கொழும்பு, ஏப். 07

பாராளுமன்றம் இன்றும், 9 மற்றும் 10ஆம் திகதிகளிலும் கூடவிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

இன்று, விளையாட்டில் பதார்த்தப் பயன்பாட்டிற்கு எதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (அ)

25ஆவது ஆண்டில் நாம்

ஓர் அச்சுக்கூடம்
மதி கலர்ஸ்
உங்கள் எண்ணங்களின் வண்ணங்களாய்...




திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை

25ஆம் ஆண்டில் தடம் பதிக்கும்
எமது நிறுவனத்திற்கு
இதுவரை காலமும் பலமாகவும்,
துணையாகவும் ஒத்தாசையாகவும்
இருந்தது நீங்களே!
நாம் சரிந்த போதெல்லாம்
எம்மோடு தோளோடு தோள்
நின்றவர் நீங்கள்.
நாம் உயர்ந்தபோது அந்த மகிழ்வைப்
பகிர்ந்தவர்களும் நீங்களே!
உங்கள் அனைவருக்கும்
இந் நன்னாளில் எமது
மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.
ஒன்றாகக் கொண்டாடுவோம்...

MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
mathicolours@gmail.com
0212229285
CUSTOMER CARE
0777222259

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible] லிமிடெட் நிறுவனத்தினரால் 07.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உ[illegible]தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org